



## SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY

P. O. BOX 2211, AUTHUR DE SILVA MAWATHA
COLOMBO 13

**Sugathadasa Indoor Stadium**
Telephone : 011-2445677, 2422841
011-2384490, 2384385
Fax : 011- 2445675
E- Mai : sugathad@sltnet.lk


**Sugathadasa Outdoor Stadium**
Telephone / Fax : 011-2423333

**Bogambara Outdoor Stadium**
Telephone / Fax : 081-2235395

**Nuwara Eliya Race Course**
Telephone : 052-2222659

**Beliatta Swimming Pool**
Telephone : 047-2251685


Designed by : Susantha Wickramasuriya (Sugathadasa Stadium)



# සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය

Incorporated by the act of Parliament No.17 of 1999



## சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதிகாரசபை

## SUGATHADASA NATIONAL SPORTS COMPLEX AUTHORITY

# 2012

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT

# சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபை

**பக்க இல.**


*கூட்டிணைப்புத் தகவல்கள்* ____ 2

*முகாமைத்துவம் - விளையாட்டரங்குகளின் கட்டுப்பாடு* ____ 3

*எமது நோக்கு மற்றும் எமது பணிக்கூற்று* ____ 4

*சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினைத் தாபித்தல்* ____ 5

*நிறுவன ஒழுங்கமைப்பு கட்டமைப்பு* ____ 6

*அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை* ____ 7

*அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்* ____ 8

*வசதிகள் மற்றும் சேவை வழங்கப்படும் துறைகள்* ____ 10

*சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம்* ____ 12

உள்ளக விளையாட்டு மைதானம் ____ 12

உப விளையாட்டுத் திடல் ____ 13

நீச்சல் தடாகக் கட்டிடத் தொகுதி ____ 14

உடற்பயிற்சி மத்திய நிலையம் ____ 15

விளையாட்டு ஹோட்டல் ____ 16

*சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம் சார் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்* ____ 17

*சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானம்* ____ 18

*சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தினை அண்மித்த அபிவிருத்தழிச் செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள* ____ 20

*ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானம்* ____ 21

*போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்* ____ 22

*பெலியத்த மற்றும் வீரக்கெட்டிய நீச்சல் தடாகம்* ____ 23

*நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானம்* ____ 24

*நிறுவனத்தின் முன்னேற்றங்கள்* ____ 27

*கணக்கீட்டுக் கொள்கைகள்* ____ 29

*வருமான செலவின வெளிப்பாடுகள்* ____ 36

*ஐந்தொகை* ____ 37

*நிதிப்பாய்ச்சல் வெளிப்பாடுகள்* ____ 38

*கணக்காய்வாளர் அறிக்கை* ____ 40

## கூட்டிணைப்புத் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**

**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை**

**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் சட்டபூர்வ உருவாக்கம்**

1999 ஆம் ஆண்டில் 17 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டமூலத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்பட்டது.

### முகாமைத்துவ சபை

| | |
|---|---|
| பிரி. ஜீ.டப்.பீ. சமரத்துங்க RSP, USP, ATO | - தலைவர் |
| திரு. எஸ்.எம். ஹறிஸ்சந்திர (2012 வரை) | - அங்கத்தவர் |
| திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரன | - அங்கத்தவர் |
| திருமதி. எம்.டீ. ரஜனி ஜயகொடி | - அங்கத்தவர் |
| திரு. மனுல சமல் பெரேரா | - அங்கத்தவர் |
| விமா.தளபதி. புவனகே தேசப்பிரிய | - அங்கத்தவர் |
| திரு. பீ. நிசால் ரத்னாயக்க | - அங்கத்தவர் |
| திரு. மனு சண்முகம் | - அங்கத்தவர் |
| திரு. பந்துக்க கீர்த்திநந்த | - அங்கத்தவர் |
| திரு. எச்.எம்.எம்.எஸ். பண்டார ஹேரத் | - அங்கத்தவர் |
| திரு. என்.பீ.ஏ. விக்ரமரட்ண | - செயலாளர் |

### முகவரி :

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி
அதிகார சபை,
த.பெ..இல. : 211, ஆதர் டீ. சில்வா மாவத்தை,
கொழும்பு – 13.

**தொ.பே. : 011-2445677, 2422841**
**011-2384490, 2384385**

**தொலைநகல் : 011-2445675**
**மின்னஞ்சல் : Sugathad@sltnet.lk**

### முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் சபை

| | |
|---|---|
| திரு. எம்.பீ.டீ.யூ.கே. மாபா பத்திரன | - தலைவர் |
| திரு. மனு சண்முகம் | - அங்கத்தவா |
| திரு. பீ.டீ. அபேசூரிய | - அங்கத்தவா |
| திருமதி. கே.பீ.பீ. பெர்ணான்டோ | - அங்கத்தவா |
| திருமதி. பீ.சீ. ஜானகி | - செயலாளர் |

### கண்காணிப்பு மட்டப் பங்களிப்பு

திரு. ஈ.ஏ.பீ. ஆனந்த

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.


### வங்கியாளர் :

இலங்கை வங்கி,
கிராண்டபாஸ் கிளை.

## முகாமைத்துவம் - விளையாட்டரங்குகளின் கட்டுப்பாடு

| | |
|---|---|
| பிரி. ஜீ.டப்.பீ. சமரத்துங்க RSP, USP, ATO | - தலைவர் |
| இரா. தளபதி. எல்.எச்.எம். ராஜபக்ஷ, RSP | - பணிப்பாளர் |
| திருமதி. எசி.எம். நில்மினி கே. ஹேரத் | - உதவிப் பணிப்பாளர் |
| திரு. ஏ.என். சமரசிங்க (2012.02.29 வரை) | - உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு) |
| திரு. சமிந்த கே. உடகும்பர | - உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) |
| திருமதி. பீ.சீ. ஜானகி | - உள்ளகக் கணக்காய்வு |
| திருமதி. என்.சீ.ஜே. அத்துக்கொரல | - முகாமையாளர் (பராமரிப்பு) |
| திரு. கே. பண்டுதிலக | - முகாமையாளர் (வெளியரங்கு / தகவல் தொழில்நுட்பம்) |
| திருமதி. பீ.டீ.என். பிரபா கிரியெல்ல | - முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) |
| திரு. ஜீ.டீ. சம்பத் பெரேரா | - முகாமையாளர் (கொள்வனவு) |
| செல்வி. நிரன்ஜலா பீ. மொரகொல்ல | - முகாமையாளர் (உள்ளரங்கு) |
| திருமதி. கே.ஜீ.ஜீ. நில்மினி கிரியெல்ல | - முகாமையாளர் (ஒதுக்கீடு) |
| திரு. டீ.சீ. வசந்த அமரசேகர | - முகாமையாளர் (கணக்கீடு) |
| திரு. எச்.ஏ. ரொஸான் குமார | - முகாமையாளர் (போகம்பர) |
| திரு. எச்.ஜீ. உபாலி | - முகாமையாளர் (பாதுகாப்பு) |

## எமது நோக்கு மற்றும் எமது பணிக்கூற்று




ஆசியாவின் முதற்தர சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகள் கொண்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதியாக சுகதாச விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினை மாற்றியமைத்தல் மற்றும் அதற்குரிய ஏனைய விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையில் விளையாட்டு அபிவிருத்தி வசதிகள் மற்றும் சலுகைகளை வழங்குதல்.

## *எமது பணிக்கூற்று*



சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் விளையாட்டுத் துறையின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் கொண்ட ஆசிய வலயத்தின் சர்வதேச மட்டத்திலான வசதிகள் கொண்ட பிரதான விளையாட்டுக் கட்டிடத் தொகுதியாக மாற்றியமைத்தல்.


## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினைத் தாபித்தல்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதிக்குப் பொறுப்பான நிதியம் 1995.02.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சுக்குப் பொறுப்பளிக்கப்பட்டதுடன் 1999 ஏப்ரல் 20 ஆந் திகதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியாக மாற்றியமைக்கும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்டது. இச்சட்டம் 1999.09.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்டதுடன் அன்றைய தினந்தொடக்கம் இத்தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி **"சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை"** என தாபிக்கப்பட்டது.

**இவ் அதிகார சபையின் முகாமைத்துவப் பணிகள் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் முகாமைத்துவச் சபை மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அச்சபை கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.**

1. தலைவா் - விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும்.
2. விளையாட்டு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளா் அல்லது பிரதிநிதி
3. தேசிய அரச பேரவையின் 1973 இலக்கம் 25 கொண்ட விளையாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் விளையாட்டுப் பணிப்பாளா் நாயகம்
4. திறைசேரிப் பிரதிநிதி
5. இதற்கு மேலதிகமாக விளையாட்டு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் 7 அங்கத்தவா்கள்

# நிறுவன ஒழுங்கமைப்பு கட்டமைப்பு



## அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை

மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்தவ சபை அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 326 ஆகும். 2012.12.13 ஆந் திகதியன்று அவ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நிறுவனத்தில் சேவையாற்றிய எண்ணிக்கை 86 சதவீதமாகும். இது கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | 2012.12.31 ஆந் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை | அங்கீகரிக்கப் பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் / மிகை |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் | HM 1-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் | MM 1-3 | - | 01 | 01 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | MM 1-3 | 02 | 04 | 02 |
| **இணைந்த சேவை** | | | | | |
| 04 | கணக்காய்வு உத்தியோகத்தர் | MA -3 | - | 01 | 01 |
| 05 | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | 01 | 01 | - |
| 06 | பராமரிப்பு உத்தியோகத்தர் | | - | 01 | 01 |
| 07 | கொள்வனவு உத்தியோகத்தர் | | 01 | 01 | - |
| 08 | விற்பனை உத்தியோகத்தர் | | 01 | 01 | - |
| 09 | விளையாட்டு மைதான முகாமையாளர் | | 04 | 04 | - |
| 10 | பிரிவுப் பொறுப்பாளர் / பாதுகாப்பு | | 01 | 01 | - |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)** | | | | | |
| 11 | தொழில்நுட்ப உதவியாளர் | MA 2-1 | - | 02 | 02 |
| 12 | களஞ்சியப் பொறுப்பாளர் | | - | 01 | 01 |
| 13 | புத்தகம் பேணுநர் | | - | 01 | 01 |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத)** | | | | | |
| 14 | உள்ளகக் கணக்காய்வு | MA 1-1 | 01 | - | (01) |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் | | 30 | 31 | 01 |
| 16 | மைதானத் திட்டமிடல் | | 01 | 01 | - |
| 17 | பணிப் பரிசோதகர் | | 01 | 02 | 01 |
| 18 | விளையாட்டுப் பயிற்சி / உத்தியோகத்தர் | | 02 | 09 | 07 |
| 19 | பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் / பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | | 14 | 20 | 06 |
| **ஆரம்பக் கலை** | | | | | |
| 20 | மின்தொழில்நுட்பவியலாளர் | PL -3 | 01 | - | (01) |
| 21 | சாரதி | | 07 | 06 | (01) |
| **ஆரம்ப பகுதிக் கலை** | | | | | |
| 22 | தச்சன், மேசன், குழாய் நீர் பொருத்துநர்கள், உருக்கி ஒட்டுநர் | PL -2 | 14 | 15 | 01 |
| 23 | செய்தியாளர்கள் | | - | 02 | 02 |
| **ஆரம்ப பகுதி கலைசாரா** | | | | | |
| 24 | விளையாட்டு மைதான உதவியாளர் | PL -1 | 110 | 110 | - |
| 25 | அலுவலக பணி உதவியாளர் | | 10 | 10 | - |
| 26 | பாதுகாப்பு மேற்பார்வை – ஆண் / பெண் | | 91 | 100 | (09) |
| | **முழு மொத்தம்** | | **279** | **326** | **27 - (12)** |

## அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

### *பொறுப்புக்கள்*

1. முகாமைத்துவச் செயற்பாடுகள், பரா மரிப்பு மற்றும் தேசிய சொத்தாக அதனைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

2. வசதிகள் மற்றும் சேவையினை சர்வதேச தரத்துக்கு அமையப் பராமரித்தல்.

3. கட்டிடங்களுக்கு மற்றும் கட்டமைப்புக் களுக்குத் தேவையான அபிவிருத்திகள் மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளல்.

4. இலங்கைப் பிரஜைகளுக்கு மற்றும் விசேடமாக இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டு இயலுமைகளை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் உடற்பயிற்சி உட்பட சுகாதாரத்தினை விருத்தி செய்யக் கூடியவாறு சபையினால் நடாத்தப்படும் நிபந்தனைகளுக்கு அமைய வசதிகளை அவர்களுக்கு வழங்குதல்.

5. விசேடமாக கிராமியப் பிரதேசங்களில் விளையாட்டுத் துறையினை விருத்தி செய்யும் நோக்குடன் விளையாட்டு தொடர்பான பயிற்சிப் பாடநெறி மற்றும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

6. தேசிய மற்றும் சர்வதேச விழாக்களுக் காகத் தேவையான வசதிகளை முகாமைத்துவச் சபையினால் விதிக்கப் படும் நிபந்தனைகளுக்கு அமைய வழங்குதல்.

7. இலங்கையில் விளையாட்டு மற்றும் களியாட்ட வசதிகளை விருத்தி செய்யும் நோக்குடன் சர்வதேச மற்றும் உள்நாட்டு விளையாட்டுப் பயிற்சி ஒழுங்குகள் உட்பட விளையாட்டு நிறுவனங்களுடனான இணைப்புக்கள் உட்பட தொடர்புகளை உருவாக்குதல்.

8. எமது அதிகார சபையின் வசதிகள் முகாமைத்துவ சபையினால் விதிக்கப் படும் நிபந்தனைகளுக்கு அமைய நியாயமான கட்டணங்களுக்கு பாடசாலைகளுக்கு, இளைஞர் விளை யாட்டுக் கழகங்களுக்கு மற்றும் விளையாட்டு அமைப்புக்களுக்கு வழங்குதல்.

### பணிகள்

மேற்கூறப்பட்ட பொறுப்புக்களை நிறை வேற்றும் வகையில் எமது அதிகார சபையினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் விளையாட்டுச் சங்கங்கள், பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள் உட்பட அரசினைப் போன்று தனியார் நிறுவனங்களுக்காகவும் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சலுகைக் கட்டணத்தின் கீழ் வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

1. தேசிய மற்றும் சர்வதேச மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளுக்காக விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குப் பயிற்சியளிக்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

2. சர்வதேச மட்டத்திலான போட்டிகளை பகல் வேளையினைப் போன்று இரவு வேளையிலும் நடாத்தத் தேவையான வசதிகளை வழங்குதல்.

3. குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்தில் திறமை மிக்க விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திறமைகளை விருத்தி செய்து முன்கொண்டு செல்லத் தேவையான வசதிகளை வழங்குதல்.

4. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நீச்சல் போட்டிகளை நடாத்தத் தேவையான நீச்சல் மற்றும் சுழியோடும் தடாக வசதிகளை வழங்குதல்.

5. பரீட்சை, கருத்தரங்கு, மாநாடு மற்றும் விழாக்கள், களியாட்டச் செயற்பாடு களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

6. பயிற்சிச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

## வசதிகள் மற்றும் சேவை வழங்கப்படும் துறைகள்

பகல் வேளைகளைப் போன்று இரவு வேளைகளிலும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் விசேட இயலுமை கொண்ட சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை விளையாட்டு, சுகாதார, கல்வியினைப் போன்று களியாட்டம் ஆகிய துறைகளுக்காக வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் தேசிய ரீதியில் காணப்படும் பாரிய பங்களிப்பினை மேற்கொள்கின்றது. விசேடமாக விளையாட்டுத் துறைக்காக சர்வதேச மட்டத்தில் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையாகும்.

### *விளையாட்டு*

சகல மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், ரகர், கூடைப்பந்து, மேசைப்பந்து, கைப்பந்து, வலைப்பந்து, பூப்பந்து, ஸ்கொஸ், மேசைப்பந்து, மல்யுத்தம், ஜூடோ, வுசு, குத்துச்சண்டை, டைகொண்டோ, கராட்டே, ஜிம்னாஸ்டிக் விளையாட்டு, காற்பந்து மற்றும் அமெரிக்க காற்பந்து போன்ற விளையாட்டுக்காக சர்வதேச மட்டத்தில் வசதிகள் வழங்கு வதாகும்.

### *சுகாதாரம் மற்றும் கல்வி*

தேசிய மற்றும் சர்வதேச விழாக்கள், செயலமர்வு, பயிற்சிப் பாடநெறிகள், உடற் பயிற்சிப் பாடநெறிகள், நீச்சல் மற்றும் உயிர்ப் பாதுகாப்புப் பாடநெறியினைத் தொடரும் கூட்டங்களுக்கான சர்வதேச மட்டத்திலான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

### *களியாட்டங்கள்*

1. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பாரிய கண்காட்சிகளுக்கான சர்வதேச மட்டத்திலான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.
2. வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்கள் :

   விற்பனைக்குரிய அசையாத புகைப் படங்களை எடுத்தல் மற்றும் ஒளி நாடாக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் சேவைகள் உட்பட அதிசிறந்த பிரபல வர்த்தக விளம்பரங்கள் இவ்வதிகார சபை சார்ந்ததாகப் படம்பிடிக்க வாய்ப்புக்கள் இருப்பதாகக் குறிப்பிடல் வேண்டும்.

**மேற்கூறப்பட்ட சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை கீழ்க்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களைக் கொண்டமைந்துள்ளது.**

1. சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கு மற்றும் நீச்சல் / சுழியோடும் தடாகம்
2. சுகததாச விளையாட்டு ஹோட்டல்
3. சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
4. ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம் (2006.11.01 ஆந் திகதி தொடக்கம் 30 வருடங்களுக்காக இலங்கைக் கிரிக்கட் நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது)
5. போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்
6. பெலியத்த மற்றும் வீரக்கெட்டிய நீச்சல் தடாகம்
7. நுவரெலிய குதிரைப் பந்தயப் போட்டி மைதானம்

## சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம்

சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம் கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

1. உள்ளக விளையாட்டு மைதானம்
2. துணை விளையாட்டுத் திடல்
3. நீச்சல் தடாகக் கட்டிடத் தொகுதி
4. உடற்பயிற்சி மத்திய நிலையம்
5. விளையாட்டு ஹோட்டல்

### உள்ளக விளையாட்டு மைதானம்



உள்ளக விளையாட்டுத் திடல் 5,004 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டல் வசதிகள் உட்பட பார்வையாளர் அரங்கினைக் கொண்டுள்ளதுடன் இங்கு உள்ளக விளையாட்டு மைதானத்தின் நீளம் 35 மிற்றரும் அகலம் 40 மீற்றரும் ஆகும். இவ்விளையாட்டு மைதானத்தில் கூடைப்பந்து, பூப்பந்து, வலைப்பந்து. ஜூடோ, ஜிம்னாஸ்டிக், வலைப்பந்து, மேசைப்பந்து, குத்துச்சண்டை, கராட்டே, மல்யுத்தம் போன்ற மனை விளையாட்டுப் போட்டிகளை நடாத்தும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட விழாக்கள், கூட்டங்கள், இசைக்கச்சேரிகள், அரச விழாக்கள் மற்றும் பல்வேறுபட்ட செயலமர்வுகளுக்காக வசதிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் 8 ஆவது ஆசிய வலைப்பந்துப் போட்டித் தொடர், றணவிரு றியல் ஸ்டார் பாடகர் போட்டி மற்றும் இலங்கை பிரிமியர் லீக் கிரிக்கட் போட்டித் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வு உட்ப விசேட விழாக்கள் இவ் உள்ளக விளையாட்டுத் திடலில் நடாத்தப்பட்டது.

2012 டிசம்பர 31 ஆந் திகதி வரை உள்ளக விளையாட்டுத் திடல் ரூபா 27,651,671 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.



8வது ஆசிய கூடைப்பந்துப் போட்டி - 2012



SLPL விளையாட்டுப் போட்டித் தொடரின் அங்குரார்ப்பணம்



றணுவிரு ரியல் ஸ்டார் பாடல் போட்டி - 2012

**2012 ஆம் ஆண்டு உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மொத்த போட்டி / கிண்ணங்கள் மற்றும் ஏனைய விழாக்கள் தொடர்பான சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.**

ஜிம்னாஸ்டிக் போட்டி - 05
வலைப்பந்துப் போட்டி - 14
குத்துச் சண்டைப் போட்டி - 09
கராட்டே / வுசு போட்டி - 16
மேசைப்பந்துப் போட்டி - 01
வலைப்பந்துப் போட்டி - 01
இசைக்கச்சேரி (மெகா) - 02
இசைக்கச்சேரி (வர்த்தமல்லா) - 04
சங்கீதப் போட்டி - 03

பரீட்சை / கல்வி வேலைத் திட்டங்கள் - 45
விருது விழா - 02
சம்மேளனம் - 05
விளம்பரப் படப்பிடிப்பு - 01
கூட்டம் (நீச்சல் தடாக விரிவுரை மண்டபம்) - 06
பயிற்சிகள் - 48

## உப விளையாட்டுத் திடல்







இவ் உப விளையாட்டுத் திடல் பூப்பந்து விளையாட்டு மைதானங்கள் மற்றும் 4 ஸ்கொஸ் விளையாட்டு மைதானங்களைக் கொண்டமைந்துள்ளதுடன் விளையாட்டுப் போட்டி மற்றும் பயிற்சிப் பணிகளுக்காக வசதிகளை வழங்குவதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,598,901 வருமானமாக ஈட்டப்பட்டது.

## நீச்சல் தடாகக் கட்டிடத் தொகுதி

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சகல வசதிகளும் கொண்ட நிச்சல் தடாகம் எமது அதிகார சபையில் காணப்படுவதுடன் இங்கு நான்கு நீச்சல் தடாகங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.



பிரதான நீச்சல் தடாகம்



சுழியோடும் தடாகம்



சிறு பிள்ளைகளுக்கான தடாகம்



பயிற்சிக்கான உப தடாகம்

8 மருங்குகளைக் கொண்ட 50 மீற்றர் நீளமான இந்த நீச்சல் தடாகத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிப் போட்டிகளை நடாத்துவது முதல் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்காகவும் தேவையான வசதிள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக நவீன இலத்திரனியல் நேரக் கணிப்பீட்டு உபகரணத்தின் மூலம் நேரக் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் பகல் / இரவுப் போட்டிகளுக்கான அதிசகக்தி வாய்ந்த மின்விளக்குகள் கோபுரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர் களுக்காக நீச்சல் பாடசாலையும் நடாத்தப்படுவதுடன் இதன் மூலம் மிகுந்த சலுகை அடிப்படையிலான கட்டணத்தின் கீழ் நீச்சல் தடாகத்தினைப் பயன்படுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் வசதிகள் அற்ற மாணவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கப் பாரிய செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படாத பிரதான நீச்சல் தடாகம் மற்றும் சுழியோடித் தடாகத்தின் நீர்க் கசிவினைச் சுத்திகரித்தன் பின்னர் 2012.09.13 ஆந் திகதி மீளப் பயன்படுத்துவதற்காகத் திறக்கும் பணிகள் இவ்வாண்டில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும். இங்கு 2500 பார்வையாளர்

களைக் கொண்ட பார்வையாளர் அரங்கும் தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதான நீச்சல் தடாகம் மற்றும் சுழியோடும் தடாகத்தின் நீர்க்கசிவு புனரமைக்கப்பட்டுள்ளமையினால் 2012 செப்டம்பர் 13 ஆந் திகதி வரை நீச்சல் போட்டிகைள் நடாத்தப்பட்டதுடன் சிறுவர் நீச்சல் தடாகம் மற்றும் பயிற்சிக்கான உப தடாகங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் டிசம்பா 31 ஆநச் திகதி வரை இந்நீச்சல் தடாகத்தின் மூலம்,

- பாடசாலை மாணவர்களுக்கான நீச்சல் அங்கத்துவம் - 672
- முதியோர்களுக்கான நீச்சல் அங்கத்துவம் - 312
- நீச்சல் போட்டி - 10
- நீர்ப்பந்துப் போட்டி - 06
- பயிற்சிகள் - 91

போன்றவைகள் தொடர்பான வசதிகளை வழங்குவதன் மூலம் ரூபா 3,660,686 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## உடற்பயிற்சி மத்திய நிலையம்

சகல வசதிகளும் கொண்ட உபகரணங்கள் உடற்பயிற்சி மத்திய நிலையத்தில் காணப்படுவதுடன் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளைப் போன்று வெளி நபர்களுக்கும் இங்கு அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இம்மத்திய நிலையத்தினை நவீனமயப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 2011 டிசம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடளன் 2012 மார்ச் மாததத்தில் நவீன மயப்படுத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. அத்துடன் இவ்வாண்டில் உடற்பயிற்சி மத்திய நிலையத்திற்காக புதிய உபகணரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் உடற்பயிற்சி மத்திய நிலையத்தில் இருந்து ரூபா 755,712 வருமானமாக ஈட்டப்பட்டது.





## விளையாட்டு ஹோட்டல்

**இவ் விளையாட்டு ஹோட்டல் கீழ்க்குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.**

- தனி அறை 06
- இரட்டை அறை 14
- குளிரூட்டப்பட்ட இரட்டை அறை 04
- கூட்டு அறை 18
- கூட்ட மண்டபம் 02



சுகததாச விளையாட்டுக் கட்டிடத் தொகுதி தாபிக்கப்பட்ட யுகம் தொடக்கம் நடாத்தப்படும் இவ் விளையாட்டு ஹோட்டல் 42 அறைகள் மற்றும் சுமார் 100 பேருக்கு அண்மித்த அளவினருக்குக் கூடுவதற்கு வசதிகள் கொண்ட அறையும், விளையாட்டு வீரர்களுக்கு தங்குமிடத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய கூட்டு அறை வசதிகளும் காணப்படு கின்றன. இந்த ஹோட்டலினால் அறை வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக திருமண விழா, கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காகத் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நலன்புரி நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு மட்டும் தேசிய சங்கத்திற்காக சலுகை அடிப்படையில் இக் ஹோட்டல் வசதிகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டு மைதானத்தின் தேவைகளுக்க தடைகள் காணப்படாதவாறு இடவசதிகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் பொது மக்களுக்கான வசதிகளும் வழங்கப்படு கின்றன. மேலும் இவ்வாண்டில் உணவுப் பான விநியோகங்கள் மேற்கொள்ளப் படுவதில்லை என்பதனால் மனை பயன்படுத்தப்படவில்லை. தற்போது இங்கு தங்குமிட வசதிகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 ஆந் திகதி வரை விளையாட்டு ஹோட்டல் மூலம் ரூபா 9,352,773 வருமானம் ஈட்டப் பட்டுள்ளது. மேலும் விளையாட்டு ஹோட்டல் முதலீட்டுச் சபையின் செயற்றிட்டமாக மூன்று நட்சத்திர ஹோட்டலாக மாற்றியமைக்கும் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கை SCARC அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் உள்ளக விளையாட்டு மைதானத்திற்குரிய மனை விளையாட்டுத் திடல், நீச்சல் தடாகம், உடற்பயிற்சி மத்திய நிலையம், விளையாட்டு ஹோட்டல் மற்றும் வாடகை, கடன் வட்டி மற்றும் ஏனைய வகைகள் மூலம் ரூபா 47,399,899 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

## சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம் சார் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்

| | விடயங்கள் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ. மி.) | 2011 ஆம் ஆண்டுக்காக (ரூ. மி.) | | 2012 ஆம் ஆண்டுக்காக (ரூ. மி.) | | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கீடு | செல வினம் | ஒதுக்கீடு | செல வினம் | |
| 01 | 50 மீற்றர் நீச்சல் தடாகம், சுழியோடும் தடாகம் மற்றும் தடாகத்தின் இலத்திரனியல் இயற்திர முறையினைப் புனரமைத்தல் | 39.97 | 28.0 | 14.52 | 11.97 | 11.72 | 100% பூரணப்படுத் தப்பட்டுள்ளது. 2013.07.07 வரை பராமரிப்புக் கால எல்லை (Defect Liability Period) |
| 02 | சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தின் உடற்சக்தி விருத்தி மண்டபத்தினைப் புனரமைத்தல் | 2.70 | 1.08 | 1.08 | 1.62 | 1.40 | 100% பூரணப்படுத் தப்பட்டுள்ளது. 2013.07.20 வரை பராமரிப்புக் கால எல்லை (Defect Liability Period) |

## சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானம்



400 மீற்றர் செயற்கை ஓடுபாதை மற்றும் விளையாட்டு மைதானம்



200 மீற்றர் செயற்கை ஓடுபாதை

பகல் மற்றும் இரவு நேரங்களில் மெய்வல்லுனர் மைதானங்களில் விளையாட்டுப் போட்டியினை நடாத்துவதற்குரிய முறைக்கு இவ் விளையாட்டு மைதானத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விளையாட்டு மைதானத்தில் ஒரே தடவையில் 20,000 பார்வையாளர்களுக்குப் போட்டியினைப் பார்வையிடக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விளையாட்டு மைதானத்தில் 400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் கொண்ட இரண்டு செயற்கை ஓடுபாதைகள் காணப்படுகின்றன. சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான இலத்திரனியல் நேரக் கணிப்பீட்டு இயந்திரம் மற்றும் இலத்திரனியல் அளவை இயந்திர வசதிகளும் மூன்று மாடிகளைக் கொண்ட ஊடகப் பிரிவும் இவ்வசதிகளில் உள்ளடங்குகின்றன. இதற்கு மேலதிகமாக அதிசக்தி வாய்ந்த மின்னொளி விளக்குத் தொகுதியின் மூலம் இரவு நேர விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விளையாட்டு மைதானத்தில் மெய்வல்லுனர் விளையாட்டு, வலைப்பந்து, கூடைப்பந்து, றகர், காற்பந்து விளையாட்டுக்களைப் போன்று பல்வேறுபட்ட விழாக்களுக்காகவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டில் திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் 15 ஆவது கனிஷ்ட ஆசிய மெய்வல்லுனர் போட்டி நடாத்தப்பட்டது. இதற்காக 400 மீற்றர் செயற்கை ஓடுபாதை மீள ஏற்படுத்துதல், காற்பந்து மைதானத்தினைப் புனரமைத்தல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 400 மீற்றர் செய்கை ஓடுபாதைக்காக முதற்தரத்தில் IAAS சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**2012 டிசம்பர் 31 வரை விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் தொடர்பிலான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

- காற்பந்துப் போட்டித் தொடர் (அமெரிக்க ஐ. இராச்சியம்) - 01
- காற்பந்துப் போட்டி - 01
- விளையாட்டு விழா (பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி) - 73
- மெய்வல்லுனர் விளையாட்டு - 18
- றகர் போட்டி - 01
- எல்லே போட்டி - 01
- வில்லெறியும் போட்டி - 03
- கூடைப்பந்துப் போட்டி - 02
- ஏனைய விளையாட்டுப் போட்டி / பயிற்சிகள் - 229
- உடற்பயிற்சிகள் - 128



கூடைப்பந்து விளையாட்டு மைதானம்

2012 டிசம்பர் 31 ஆந் திகதி வரை திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள் / விழாக்கள் மற்றும் குத்தகைக் கூலி, வாகனத் தரிப்பிடம் மற்றும் ஏனைய வகைகள் மூலம் ரூபா 20,935,006 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

## சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தினை அண்மித்த அபிவிருத்தழிச் செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்

| | விடயங்கள் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ. மி.) | 2011 ஆம் ஆண்டுக்காக (ரூ. மி.) | | 2012 ஆம் ஆண்டுக்காக (ரூ. மி.) | | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கீடு | செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் | |
| 01 | (அ) காற்பந்து விளையாட்டு மைதானத்தினைப் புனரமைத்தல் | 163.18 | 53.03 | | 5.95 | - | 100% பூரணப்படுத் தப்பட்டுள்ளது. 2013.07.19 வரை பராமரிப்புக் கால எல்லை |
| | (ஆ) 400 மீற்றர் செயற்கை ஓடுபாதையை மீள உருவாக்குதல் | | | 43.50 | 104.20 | 81.36 | 100% பூரணப்படுத் தப்பட்டுள்ளது. 2013.04.20 வரை பராமரிப்புக் கால எல்லை |
| 02 | திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு மற்றும் வடிவமைப்பு | 15.00 | - | - | 15.00 | 14.82 | 100% பூரணப்படுத் தப்பட்டுள்ளது. |

## ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானம்



ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானம் எமது நாட்டிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான கிரிக்கட் போட்டிகளை நடாத்தக் கூடிய சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானமாகும். இங்கு ஒரே தடவையில் 35,000 பார்வையாளர்களுக்கு போட்டியினை ரசிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் பாரிய வாகனத் தரிப்பிடமும் அடங்கியுள்ளது. இவ் விளையாட்டு மைதானம் 2006.05.10 ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய 2006.11.01 ஆந் திகதி தொடக்கம் 30 ஆண்டுகளுக்காக இலங்கை கிரிக்கட் நிறுவகத்திற்கு மாதமொன்றிற்கு 250,000 ரூபாவிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் இவ்விளையாட்டு மைதானத்தின் மூலம் 3,000,000 ரூபா வருமானம் ஈட்டப்பட்டது.

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் பிரதான வருமானமாகக் காணப்பட்ட இவ்விளையாட்டு மைதானம் நீண்ட கால மாற்றமற்ற மாதாந்த வாடகைக் கூலிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை இவ்வதிகார சபையின் வருமானம் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்துள்ளது.

## போகம்பற திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம்





இவ்விளையாட்டு மைதானம் கண்டி நகர சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் எமது அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. இத் திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தில் ஒரே தடவையில் 10,000 ரசிகர்களுக்குப் போட்டியினைப் பார்வையிட முடியும். இதற்குத் தேவையான வசதிகள் விளையாட்டு மைதானத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. இங்கு மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், காற்பந்து, றகர், கரப்பந்து, வலைப்பந்து, பாடசாலை விளையாட்டு விழாக்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கான வசதிகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டில் விளையாட்டு மைதானத்தின் மின் செயற்பாட்டுத் தொகுதியின் மீள் உருவாக்கம் மற்றும் சக்தி வள விருத்தி மண்டபத்தினைப் புதிதாக நிர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்விளையாட்டு மைதானம் 2012 ஆம் ஆண்டில் 3,607,026 ரூபா வருமானத்தை ஈட்டியது.

### 2012 ஆம் ஆண்டு இவ்விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் தொடர்பான அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- மெய்வல்லுனர் மற்றும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் - 62
- காற்பந்துப்போட்டிகள் - 41
- றகர் போட்டிகள் - 35
- றகர் போட்டிகள் (உள்ளக நேரசூசி 7) - 01
- விளையாட்டுப் பயிற்சிகள் - 443
- ஏனையவைகள் - 92

## பெலியத்த மற்றும் வீரக்கெட்டிய நீச்சல் தடாகம்

பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வீரக்கெட்டிய ராஜபக்ஷ மத்திய மகா வித்தியாலயத்தின் நீச்சல் தடாகப் பராமரிப்பு மற்றும் நிர்வாகப் பணிகள் மாத்திரம் 2008.08.07 ஆந் திகதி தொடக்கம் எமது அதிகார சபையினால் பேணப்படுகின்றது.

அருகாமையில் உள்ள பிரதேசங்களில் முதியோர் மற்றும் பாடசாலை மாணவ மாணவிகளுக்காக நீச்சல் பயிற்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் இந்நிச்சல் தடாகத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 151,481 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.



- **பெலியத்த நீச்சல் தடாகம்**
  - I 08 கரும பீடங்களைக் கொண்ட 50 மீற்றர் நீச்சல் தடாகம்
  - II சுழியோடும் தடாகம்

- **வீரக்கெட்டிய**
  - I 08 மருங்குகளைக் கொண்ட 25 மீற்றர் நீச்சல் தடாகம்



## நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானம்





2011.09.07 ஆந் திகதி விளையாட்டுத்துறை அமைச்சினாலட் நுவரெலிய குதிரைப்பந்தயத் திடலின் முகாமைத்துவம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் கீழ் தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ் அதிகார சபையின் முகாமைத்துவத்தினால் இவ் வளாகத்தின் 34.564 ஹெக்டயர் குதிரைப் பந்தய விளையாட்டு மைதானம் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

**வருமானச் சேகரிப்பு (நிதி முன்னேற்றம்)**

அ) 2012.01.11 ஆந் திகதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினக் கௌரவ தலைவரின் தலைமையில் குதிரைப்பந்தய விளையாட்டு மைதானத்தின் குதிரை உரிமை யாளர்கள், குதிரைப் பயிற்றுவிப் பாளர்கள் மற்றும் உரிமையாளர் களுக்கிடையே இடம் பெற்ற கலந்துரையாடலில் பெறப்பட்ட தீர்மானத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டுக்கு குதிரைகள் தடுத்து வைக்கப்படும் அறை ஒன்றுக்கு ரூபா 100 வீதமும், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இதற்காக 200 ரூபா வீதமும் அறவிடத் தீர்மானிக்கப் பட்டது. இதன் மூலம் குதிரைகள் மற்றும் குதிரை உரிமையாளர் களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட மொத்த வருமானமாக 10 சதவீதத்தை இவ் அதிகார சபைக்குப் பெற்றுக்கொள்ளத் தீர் மானிக்கப்பட்டது.

ஆ) 2012.03.12 ஆந் திகதி தொடக்கம் இலங்கை குதிரைப் பந்தயக் கழகம் மற்றும் இவ் அதிகார சபைக் கிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் குதிரைப் பந்தயத்தினை நடாத்த வதற்காக ரூபா 50,000 மாதாந்த வாடகையினை இவ் அதிகார சபைக்குப் பெற்றுக் கொள்ள மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் இணக்கங்கள் எட்டப்பட்டன.

இ) நுவரெலியா வசந்த காலத்திற்காக குதிரைப் பந்தயத் திடலினைச் சார்ந்த விழாக்களில் பல்வேறுபட்ட தரப்பினர்களிடமிருந்து கூலி அடிப்படையில் குதிரைப் பநச்தய விளையாட்டு மைதானத்தினை வழங்குதல்.

ஈ) குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தினை அண்மித்த பகுதி யில் வாகனங்களை நிறுத்தவதற்குத் தேவையான இட வசதிகளை வழங்குதல்.

**உத்தேச வருமான வகைகள்**

அ) குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தின் பொருத்தமான இடங்களில் பிரச்சாரப் பலகைகளைப் பொருத்துதல்.

ஆ) குதிரைகளைத் தடுத்து வைக்கும் இடம் மற்றும் வளாகத்தின் அலங்கார இடங்களினைப் பார்வையிட வருகை தரும் உள்நாட்டு / வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல்.

இ) கூடுதலாக குதிரைப் பந்தயப் போட்டிகளை நடாத்தத் தேவையான இடவசதிகளை வழங்குதல்.

ஈ) உள்நாட்டு / வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வழங்கப்படும் உணவக வசதிகளை வழங்குதல்.

உ) தேசிய மட்டத்திலான அபிவிருத்தி யோசனையான அதியுயரிய இடத்தில் விளையாட்டுக் கட்டிடத் தொகுதிக்கு இணைவாக வருமான வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்.

**மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள்**

அ) குதிரைப் பந்தய மைதானத்தைச் சூழத் தங்கியுள்ள சட்டவிரோத குடியேற்றக்காரர்களை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து மீள வேறிடத்தில் குடியமர்த்தும் செயற்றிட்டம்.

இதற்காக களனிவெலி கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பீற்றுட் தோட்டத்தின் ஸ்கெரப் 2½ ஏக்கர் பகுதியினைச் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்விடத்தில் அபிவிருத் திப் பணிகள் மற்றும் வீடமைப்பு உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

ஆ) குதிரை மற்றும் உரிமையாளர் களுக்காக அடையாள அட்டைகளை வழங்குதற்கும் சீருடைகளைத் தயாரிப்பதற்கும் திட்டங்கள் வகுக் கப்பட்டுள்ளன.

இ) குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தினைச் சூழ அலங் கரிப்பதற்கு மற்றும் சூழ பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்காக சைப்ரஸ்

மரங்களை நடுவதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல். இதற்காகத் தேவையான மரங்கள் வனவளப் பாதுகாப்புத் திணைக் களத்தினால் இலவசமாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் செப்டம்பர் 30 ஆந் திகதி குதிரைப் பந்தய வளாகத்தில் குதிரைகளை தடுத்து வைக்கும் இடங்களில் இருந்து குத்தகைக் கூலி, குதிரை / உரிமையாளர்களுக்காக 10% வாடகை விழாக் காலங்களுக்காக இடத்தினைக் கூலியின் அடிப்படை யில் வழங்குவதற்கும் மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு கூலி ஆகிய வகைகள் மூலம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதி அன்று ரூபா 2,080,131 வருமானமாக ஈட்டப்பட்டது.





2013 ஆம் ஆண்டுக்காக இவ்விளையாட்டு மைதானத்தின் பல்வேறுபட்ட வருமான வகைகளின் மூலம் யோசனைகள் தெரிவிக்கப்பட்டதுடன் நிலையான நிர்மாணிப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் விளையாட்டுத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

## நிறுவனத்தின் முன்னேற்றங்கள்

2012 ஆம் ஆண்டில் அதிகார சபையின் மூலதனச் செலவினம் ரூபா 201,084,342 என்பதுடன் தேய்மானம் மற்றும் பணிக்கொடை ஒதுக்கீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 238,301,667 ஆகும். இதில் ரூபா 76,442,520 நிதி நிலையான சொத்தாக தேய்மான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


2012 ஆம் ஆண்டுக்காக அதிகார சபையில் திறைசேரியில் முதலன ஒதுக்கீடாக ரூபா 148,000,000 மீண்டெழும் ஒதுக்கீடாக 7பா 78,400,000 நிதி பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுக்கு இணைவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மீண்டெழும் ஒதுக்கீட்டு நிதி ரூபா 3,800,000 இனால் அதிகரித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு அதிகார சபையினால் உழைக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 77,173,543 என்பதுடன் அது 2011 ஆம் ஆண்டை விட ரூபா 8,166,583 அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. 2012 ஆம் ஆண்டின் செலவினம் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்கையில் அதிகரிப்பதற்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு ரூபா 13,421,225 நிதி காரணமாகும். பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 640,277. ஏனைய செலவினம் 13,794,650 என அதிகரித்திருப்பது பிரதான காரணியாகும்.

2012 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் உழைக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 77,173,543 என்பதுடன் தேய்மான ஒதுக்கீட்டுடன் மொத்தச் செலவினம் (நிதிச் செலவினத்துடன்) ரூபா 238,331,667 ஆகும்.

**2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை நிறுவனத்தினால் உழைக்கப்பட்டள்ள வருமானம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு தளம்பல் அடைந்துள்ளது.**

| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் ரூ.மி. | 67.32 | 60.65 | 54.78 | 57.85 | 61.60 | 69.00 | 77.17 |




2009,2010,2011,2012 ஆம் ஆண்டுகளில் தொடராக கருத்திற் கொள்ளும் போது 6.48%, 12.01%, 11.07% இனால் வருமானம் கிரமமான அதிகரிப்பைக் காண்பித்துள்ளது.

## நிறுவனத்தின் மொத்தக் கடன்

**2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை இருந்த கடன் நிலைமை கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு தளம்பல் அடைந்துள்ளது.**

| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| கடன் ரூ.மி. | 0.10 | 1.50 | 2.30 | 4.61 | 133.03 | 42.95 | 42.04 |

2010,2011,2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது காணப்பட்ட கடன் நிலைமை துரித குறைவினைக் காண்பித்துள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

**01. பொதுவான விடயங்கள்**

**1.1. ஒப்பீட்டு வெளிப்பாடுகள்**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் கணக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைக்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1.2. தயாரிக்கும் அடிப்படை**

நிதி வெளிப்பாடுகள் வரலாற்றுச் செலவினத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காணி, கட்டிடம் மற்றும் இயந்திர உபகரண மீள் மதிப்பீட்டிற்றாக ஒப்பீடுகள் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் போது பணவீக்க நிலைமை கருத்திற் கொள்ளப்படவில்லை.

**1.3. ஐந்தொகைத் தினத்திற்குப் பின்னைய நிகழ்வுகள்**

ஐந்தொகைத் தினத்திற்குப் பின்னர் நிகழும் சகல அளவையியல் ரீதியிலான அழுத்தங்கள் இருப்பின் அதற்காக நிதி அறிக்கைகளில் தேவையான ஒப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டள்ளதுடன் அவ் ஒப்பீடுகள் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**02. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை**

ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்தக்கள் மூலம் நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டுள்ளது நிதி மற்றும் வங்கி நிலுவையின் பொதுவான கொடுக்கல் வாக்கல் செயற்பாடுகளை ஒரு வருடத்திற்குள் நிதியாக மாற்றியமைக்கக் கூடியது எனக் கருதப்படக் கூடிய வகைகளாகும்.

**2.1. சொத்துக்கள்**

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருப்பது திரண்ட தேய்மானத்தினைக் குறைத்ததன் பின்னர் காணப்படும் பெறுமானத்திற்கு அமையாவகும். கட்டிடங்கள் சொத்துக்களில் அடங்கும் செலவினமாக அவைது பொருட்கள் மற்றும் நேரடி ஊழியச் செலவினமாகும். அத்துடன் நிலையான சொத்து பிரதான உப பிரிவுகளில் ஒதுக்கப்பட்டிருப்பது அவை பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தின் அடிப்படையிலாகும்.

**ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம்**

ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம் 2006.11.01 ஆந் திகதி தொடக்கம் இலங்கைக் கிரிக்கட் நிறுவகத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூபா

250,000 அறவிடும் அடிப்படையில் 30 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. 2006.12.31 ஆந் திகதியளவில் இலங்கைக் கிரிக்கட் நிறுவகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்காக சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபைக்கு ரூபா 25,023,264 நிதி அறவிட வேண்டியுள்ளதுடன் இது தொடர்பாக தற்போது அறவிடப்படும் மாதாந்த வாடகை தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் பொதுவான இணக்கத்தினை எட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

**பெலியத்த மற்றும் வீரக்கெட்டிய நீச்சல் தடாகக் கட்டிடத் தொகுதி**

பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வீரக்கெட்டிய ராஜபக்ச மத்திய மகா வித்தியாலயத்திற்கு உரியதாக இருந்த இரு நீச்சல் தடாகம் மற்றும் சுழியோடும் தடாகம் 2008ெ ஆம் ஆண்டு தொடக்கம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையினால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகார சபையின் முகாமைத்தவ அங்கீகாரத்திற்கு அமைய 9 ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேர் ஒப்பந்த அடிப்படை யிலாகும்.

2008 ஆம் ஆண்டில் இந்நீச்சல் தடாகங்களின் செலவினம் உள்ளக விளையாட்டு மைதானத்தின் செலவினமாக கணக்குகளில் பதிவு செய்யப் பட்டுள்ள போதிலும் முகாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கு அமைய 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இந்நீச்சல் தடாகங்களின் செலவினம் தனியாகக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானம்**

இக் குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தின் பொறுப்பு 2011.07.05 ஆந் திகதி தொடக்கம் விளையாட்டுத்துறை அமைச்சினால் பொறுப்பேற்கப் பட்டதுடன் 2011 ஒக்டோபர் 23 ஆந் திகதி தொடக்கம் இக் குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தின் முகாமைத்துவம் எமது அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டது.

## 2.2. ஏனைய செவினங்கள்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களில் அடங்கும் பகுதிகளை மீளத் தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனியான கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அவை முதலீடாக மாற்றியமைத்து பயன்மிக்க ஆயட்காலத்திற்குள் எழுதி முடிப்பதற்காக கணக்குகளில் பதியப் பட்டுள்ளன. ஏனைய செலவினம் மூலதனமாக்கப்பட்டிருப்பது அச்செலவினங்களின் மூலம் சொத்துக்களின் எதிர்காலப் பொருளாதாரப் பயன்களின் அதிகரிப்புக்கள் ஏற்படும் செலவினங்களுக்கு அமைவானது என்பதுடன் ஏனைய சகல செலவினங்களும் வருமான வெளிப்பாடுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## 2.3. தேய்மானம்

தேய்மானக் கொள்கையாக குறுகிய செயற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன் சொத்துக்களின் தேய்மானங்கள் இடம்பெறுவது சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டு தொடக்கமாகும். தேய்மானம் எதிர்பார்க்கப்பட்ட ஆயட்காலத்திற்குள் வருமானம் செலவினக் கணக்குகளில் எழுதப்பட்டுள்ளன. காணிக்காகத் தேய்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

- கட்டிடம் மற்றும் நிர்மாணிப்பு 2.5%
- அதிசக்திவாய்ந்த மின்கோபுரம் 10%
- செயற்கை ஓடுபாதை 20%
- இயந்திரம் மற்றும் உபகரணங்கள் 10%
- குணினி 25%
- மோட்டார் வாகனம் 20%
- விளையாட்டு உபகரணங்கள் 10%
- தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 10%
- அலுவலக உபகரணங்கள் 10%
- திரைச்சீலை 50%
- அதிசக்தி வாய்ந்த மின்குமிழ்கள் மற்றும் இக்னேட்டர் 33%

32-5811 கொண்ட பஜரோ வாகனம் மனிதவலு மற்றும் உள்ளீட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் அதிகார சபையின் சொத்தாகக் கருத முடியாது. அதற்குரிய பராமரிப்புக்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமானச் செலவினங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

64-3180 கொண்ட பஜரோ வண்டி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் எமது அதிகார சபையின் சொத்தாகக் கருத மடியாது. அது தொடர்பிலான பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமானச் செலவின எதிர்பார்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய வரவுசெலவுச் சுற்றறிக்கை 150 இற்கு அமைய பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 9,100,000 பெறுமதியான NB-1527 புதிய வாகனம் வழங்கப் பட்டுள்ளது. வாகனத்தின் பெறுமதியாக காப்புறுதிக் கொடுப்பனவுகள் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

**2.4. வர்த்தக மற்றும் ஏனைய கடன்படுநர்**

வர்த்தக மற்றும் ஏனைய கடன்நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பது அவற்றின் தேறிய, திரண்ட பெறுமதியின் அடிப்படையில் ஆகும்.

**2.5. இருப்பு**

நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது செலவினம், தொகைப் பெறுமதிகளுக்கு முதல் கிடைக்கப்பெற்றவைகளாகும். முதல் வெளியீட்டு முறைமைக்கு அமையத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதுடன் அதற்கு கொள்வனவுச் செலவினம் மற்றும் தொகை அறிக்கைகளில் தற்போதைய நிலைமை மற்றும் உரிய இடத்திற்குக் கொண்டு செல்லும் வரை மேற்கொள்ளப்படும் சகல செலவினங்களும் உரியதாகும்.

**03. ஒதுக்கீடு மற்றும் பொறுப்புக்கள்**

நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்காணப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. நிதி அறிக்கைகளின் நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருப்பது ஐந்தொகைத் தினந் தொடக்கம் ஒரு வருடத்திற்குள் செலுத்தி முடிக்க வேண்டிய அல்லது கோரும் போது செலுத்த வேண்டிய பொறுப்பாகும். நடைமுறையல்லாத பொறுப்பு எனப்படுவது ஒரு வருடத்தினை விட மேற்பட்ட காலத்திற்குள் செலுத்தி முடிக்க வேண்டிய பொறுப்பாகும்.

**3.1. ஊழியர் உரிமைகள்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊஏழியர் பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் மூலம் நிதி அறிக்கைகளின் செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**3.2. வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்**

வர்த்தக் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அவற்றின் பெறுமிக்கு அமைய நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3.3. ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடை**

பணிக்கொடைக்காக நிதி அறிக்கைகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் முதல் சேவை ஆண்டு தொடக்கம் சகல ஊழியர்களுக்கும் இவ் ஒதுக்கீட்டுக்காகக் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. இது இலங்கைக் கணக்கீட்டுத் தரம் இலக்கம் 16 இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இக்கொடுப்பனகவுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பது 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைய உரிமை பெற்று தொடர்ச்சியாக ஐந்து வருடம் பூரணப்படுத்திய ஊழியர்களுக்கு மாத்திரம் ஆகும்.

## 04. வருமான வெளிப்பாடுகள்

### 4.1. வருமானம்

இலங்கைக் கணக்கீட்டுத் தரத்திறங்கு அமைய உரிய சேவைளை வழங்கியதன் பின்னா் திரண்ட அடிப்படையில் வருமானம் இனங்காணப்பட்டுள்ளது.

### 4.2. செலவினம்

வருமான விபரத்தின் இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்பட்டிருப்பது வரிக்கு முன்னர் மற்றும் சகல இனங்காணப்பட்ட பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னராகும்.

தேசிய பற்றாக்குறையினைக் கணிப்பீடு செய்யும் போது சொத்து பராமரிப்பு மற்றும் வா்த்தகத்தினை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் வருமான விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தா்கள் மற்றும் ஊழியா்களின் தொலைபேசி, மின்சாரம், நீா்க் கட்டணம் மற்றும் வாடகை அறவிடப்படுவதுடன் ஏனைய செலவினங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 4.3. நிதிச் செலவினம்

நிலையான வைப்புக்களில் வட்டி வருமானம் திரண்ட முறைக்கு அமையக் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. வட்டிச் செலவினம் மற்றும் ஏனைய கடன் செலவினம் நிதிச் செலவினத்தைக் கணிப்பீடு செய்யும் போது ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.4. கொடுப்பனவு

வழங்கள் மற்றும் உதவிகளுக்குரிய செலவினங்களுக்கு ஏற்றவாறு ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சொத்துக்களுக்குரிய நிதி அல்லாத வழங்கல் இதன் பெறுமதிக்கு கணக்குகளில் பதியப்பட்டுள்ளதுடன் அச் சொத்தின் பயன்பாட்டு ஆயட்காலத்திற்குள் வருமான வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 05. நிதிப்பாய்ச்சல் வெளிப்பாடுகள்

### 5.1. நிதி

நிதி என அறிமுகப்படுத்தப்படுவது கையில் எஞ்சியுள்ள நிதி மற்றும் அதியுயரிய நெகிழ்வுத் தன்மை கொண்ட நிதியாக மாற்றியமைக்கக் கூடிய, அவ்வாறு மாற்றியமைக்கும் போது எதுவித பாதிப்புக்களும் அற்ற சொத்தாகும். இதற்காக நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகளில் நிதி எனப்படுவது கையில் உள்ள மற்றும் வங்கியில் உள்ள நிதியாகும். நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டிருப்பது சுற்று முறையின் அடிப்படையிலாகும்.

## 06. ஐந்தொகைத் தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் தினத்திற்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப் பட்டுள்ளதுடன் தேவையான ஒப்பீடுகள் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**சுகதாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை**

- வருமான செலவின வெளிப்பாடுகள்
- ஐந்தொகை
- நிதிப்பாய்ச்சல் வெளிப்பாடுகள்

# 2012

# வருமான செலவின வெளிப்பாடுகள்

| 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவின வெளிப்பாடுகள் | | |
|---|---|---|
| | **31-12-2012** | **31-12-2011** |
| | | |
| வருமானம் | 77,173,543 | 69,268,569 |
| | **77,173,543** | **69,268,569** |
| | | |
| அரசின் திறைசேரி ஒதுக்கீடு | 78,400,000 | 74,600,000 |
| | | - |
| | **78,400,000** | **74,600,000** |
| | | |
| மொத்த வருமானம் | **155,573,543** | **143,868,569** |
| | | |
| கழி : | | |
| **செயற்பாட்டுச் செலவினம்** | | |
| ஊழியர் சம்பளச் செலவினம் | (96,274,825) | (82,853,600) |
| முகாமைத்துவ சபைக் கொடுப்பனவு மற்றும் செலவின | (365,200) | (305,600) |
| பணிக்கொடை ஒதுக்கீடு | (5,262,310) | (4,622,033) |
| தேய்மானம் | (76,442,520) | (83,935,354) |
| ஏனைய செலவினம் | (59,986,812) | (46,192,162) |
| | **(238,331,667)** | **(217,908,750)** |
| | | |
| செயஙற்பாட்டு மிகை (பற்றாக்குறை) | (82,758,124) | (74,040,180) |
| மிகை பணிக்கொடை ஒதுக்கீடு | - | - |
| நிதிச் செலவினம் | (132,086) | (177,912) |
| வாடகைக்கு முன்னர் மிகை (குறைவு) | **(82,890,210)** | **(74,218,093)** |
| | | |
| கூட்டுக : செயற்பாடல்லாத வருமானம் | - | - |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 906,139 | 719,628 |
| ஆரம்ப வாடகைத் தேறிய மிகை (பற்றாக்குறை) | **(81,984,071)** | **(73,498,464)** |
| | | |
| வருமான வரி | (70,164) | (70,164) |
| ஆண்டின் மிகை (பற்றாக்குறை) | **(82,054,235)** | **(73,568,628)** |
| | | |
| | | |

## ஐந்தொகை

| 2012 டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை | | |
|---|---|---|
| | **31-12-2012** | **31-12-2011** |
| **நிலையான சொத்து** | | |
| **நடைமுறையல்லாத சொத்து** | | |
| காணி | 2,856,612,141 | 2,856,612,140 |
| கட்டிடம் | 1,076,753,164 | 1,093,331,754 |
| செயற்கை ஓடபாதை | - | - |
| அதிசக்திவாய்ந்த மின் கோபுரம் | 4,141,482 | 4,918,748 |
| அதிசக்திவாய்ந்த மின்குமிழ் | 1,777,915 | 641,748 |
| இயந்திரம் மற்றும் உபகரணம் | 151,673,802 | 188,750,555 |
| கணினி | 1,096,026 | 44,376 |
| மோட்டார் வண்டி | 14,526,848 | 11,163,872 |
| விளையாட்டு உபகரணங்கள் | 38,048,039 | 20,427,422 |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 773,661 | 1,205,545 |
| அலுவகம் மற்றும் ஏனைய உபகரணங்கள் | 7,174,199 | 8,894,310 |
| திரைச்சீலை | 2 | 2 |
| மேற்கொள்ளப்படும் பணிகள் | 241,277,410 | 105,986,118 |
| | **4,393,854,688** | **4,291,976,590** |
| | | |
| **நீண்டகாலச் சொத்து** | | |
| நிலையான வைப்பு | 29,529,338 | 9,559,083 |
| | **29,529,338** | **9,559,083** |
| | | |
| **நடைமுறைச் சொத்து** | | |
| இருப்பு | 9,561,732 | 10,964,343 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிலுவை | 52,602,448 | 5,930,147 |
| பணியாளர் சபைக் கடன் | 15,696,923 | 17,174,410 |
| கடன்படுநர் | 42,043,413 | 42,959,310 |
| நிதி மற்றும் வங்கி நிலுவை | 6,209,385 | 58,683,222 |
| | **126,113,901** | **135,711,432** |
| | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | **4,549,497,927** | **4,437,247,105** |
| | | |
| **மூலதனப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| அரச வழங்கல் | 5,475,905,208 | 5,319,165,708 |
| திரண்ட நிதியம் | (934,967,488) | (868,442,965) |
| மீள் மதிப்பீட்டு மிகை | 9,334,652 | 4,674,423 |
| ஆண்டின் மிகை / குறைவு | (82,054,235) | (73,568,628) |
| | **4,468,218,137** | **4,381,828,537** |
| | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | 32,999,316 | 29,935,914 |
| | **32,999,316** | **29,935,914** |
| | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| கடன்படுநர் | 19,940,272 | 9,548,279 |
| ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | 17,163,010 | 4,187,952 |
| பாதுகாப்பு வைப்பு | 3,754,268 | 3,439,727 |
| திரண்ட செலவினம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 6,444,476 | 7,695,020 |
| கிடைக்கப்பெற்ற முற்பண நிதி | 908,284 | 541,513 |
| குத்தகை ஒதுக்கீடு | **70,164** | **70,164** |
| | **48,280,474** | **25,482,654** |
| | | |
| **மொத்த மூலதனப் பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | **4,549,497,927** | **4,437,247,105** |

## நிதிப்பாய்ச்சல் வெளிப்பாடுகள்

| 2012 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் வெளிப்பாடுகள் | | |
|---|---|---|
| | **31-12-2012** | **31-12-2011** |
| செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப்பாய்ச்சல் | | |
| குத்தகைக்கு முன்னர் மிகை அல்லது தேறிய குறைவு | (81,984,071) | (73,498,464) |
| | | |
| திரண்ட நிதியத்திற்கு கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேய்மான ஒப்பீடுகள் | | |
| தேய்மான ஒதுக்கீடு | 76,442,520 | 83,935,354 |
| கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தே.ஒதுக் | 22,763,724 | (10,874,767) |
| மீள் மதிப்பீட்டு மிகை | 4,660,229 | - |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 5,262,310 | 4,974,002 |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னைய செயற்பாட்டு இலாபம் | **109,128,783** | **4,536,125** |
| | | |
| நடைமுறைச் சொத்துக்களின் மாற்றம் | | |
| (அதிகரிப்பு) / குறைவு இருப்பு | 1,402,611 | (485,928) |
| (அதிகரிப்பு) / குறைவு கிடைக்க வே. நிலுவை | (44,278,917) | (1,615,292) |
| (அதிகரிப்பு) / குறைவு செலுத்த வே. நிலுவை | 22,797,819 | (134,511,124) |
| நிதி திரட்டும் செயற்பாட்டு இலாபம் | **(20,078,487)** | **(132,076,219)** |
| | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தல் | (2,198,908) | (344,584) |
| | | |
| செயற்பாடுகள் மூலம் தேறிய நிதி நிலுவை | **(2,198,908)** | **(132,420,802)** |
| முதலீட்டுச் செயற்பாடுகள் மூலம் நிதிப் பாய்ச்சல் | | |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணக் கொள்வனவு | (201,084,342) | (126,761,497) |
| குத்தகைக் கொடுப்பனவு | (70,164) | - |
| நிலையான வைப்புக்களின் முதலீடு | (19,970,255) | 10,000,000 |
| நிலையான வைப்புக்களின் விடுவிப்பு | - | (38,621) |
| முதலீட்டுச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதி நிலுவை | (221,124,761) | (116,800,118) |
| | | |
| நிதியாக்கச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல் | | |
| திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் | 7,044,105 | 13,618,515 |
| அரச மூலதன வழங்கல் | 156,739,500 | 291,189,602 |
| நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதி நிலுவை | **163,783,605** | **304,808,117** |
| | | |
| நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | (52,473,839) | 55,587,197 |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் | 58,683,222 | 3,096,025 |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் நிலுவை | **6,209,383** | **58,683,222** |

# கணக்காய்வாளர் அறிக்கை

# 2012

## கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } எல்எஸ்/ஏ/எஸ்என்எஸ்சீஏ/எவ்ஏ/2012
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2014 பெப்ரவரி 28

தலைவர்,
சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபை

**சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 14(2)(சீ) இன் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று என்பவற்றையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 17 ஆம் இலக்க சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ)பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானத்திக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாகச் சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail } oaggov@sltnet.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக் கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுகததாசா தேசிய விளையாட்டுகள் கட்டிடதொகுதி அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை அரச துறை கணக்கீட்டுத் நியங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 20,759,245 ஆனதுடன் அத்தகைய சொத்துக்கள் அதிகாரசபையால் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் முகாமைத்துவத்தால் அவற்றினை மீள்மதிப்பீடு வெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,250,941 தொகையான இரண்டு ஆண்டுகளிற்கு மேலான மீளளிப்பு செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் உரிய தரப்பினரால் கோரப்பட்டிருக்காதமையால் ஏனைய வருமானமாக கணக்கிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

2.2.2. **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,938,879 தொகையான மொத்த கடன்பட்டோரில், ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 34,932,929 தொகை அறவிடப்படாமல் இருந்தது. மேலும், அக்கடன்பட்டோரின் சரியானதன்மை மற்றும் அறவீட்டுத் தன்மை என்பவை பற்றி உரிய தரப்பினரால் மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கமையால் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,117,357 தொகையான மொத்த நானாவித கடன்பட்டோரில், ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 2,765,932 தொகை அறவிடப்படாமல் இருந்தது. மேலும், ஐந்து ஆண்டுகளிற்கு மேற்பட்ட

மீதி லயன் கிளப்பிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,936,100 தொகையை கொண்டுள்ளது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை பௌதீக மெய்மையாய்வை மேற்கொள்ளாமல் அதிகாரசபையின் இருப்புக்களாக ஆர். பிறேமதாச விளையாட்டரங்கில் உள்ள ரூபா 2,149,491 பெறுமதியான இருப்புக்கள் கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, இருப்புக்களின் சரியான தன்மை மற்றும் உள்ளதன்மை பற்றி கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) சுகததாசா வெளிப்புற விளையாட்டரங்கு வீஐபீ கட்டிடத்தின் புதுப்பித்தலின் மேலதிக வேலைகளின் அளவீட்டு பட்டியல் (பீஓகியூ) கணக்காய்விற்கு தரப்பட்டிருக்காமையால் ரூபா 2,908,153 தொகையான அத்தகைய வேலைகளின் கொடுப்பனவுகளின் சரியான தன்மை பற்றி கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

மீளாய்வாண்டின் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகளுக்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(டி) ஆம் பிரிவு | அதிகாரசபையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 396(டி) | அதிகாரசபையானது 2013 மே 31 வரையும் ஆறு மாதங்களிற்கு மேலான காலமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 210,724 பெறுமதியான பத்து காசோலைகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | வரைவு நிதிக் கூற்றுக்கள்நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 |

4

| | | |
|---|---|---|
| | | ஏப்ரல் 02 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2002 நவம்பர் மாதத்தின் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருள்களிற்காக தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 8 ஆம் பிரிவு | ஆதிகாரசபைக்கு ஒரு டபிள்கப் வாகனம் கிடைத்தமையால், கைதவிர்ப்பிக்காக குறிப்பிடப்பட்ட வாகனம் கைதவிர்க்கப்பட வேண்டியதுடன் பெறுகைகள் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். எவ்வாறாயினும், கைதவிர்ப்பதற்காக குறிப்பிடப்பட்ட வாகனம் கைதவிர்க்கப்படாமல் அது இன்னமும் அதிகாரசபையால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. |
| (ஊ) | 2006 மார்ச் 01 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டலின் 3.2.2(அ) ஆம் பிரிவு | ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போட்டிக் கேள்வி கோரும் போது, உயர்ந்த விற்பனை சுழற்சியிலிருக்கும் தேசிய புதினப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிப்பதற்கும் கொள்வனவு முகவராண்மை இணையதளம் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட இணையதளங்களில் பிரசுரிப்பதற்கும் வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுகததாச வெளியக அரங்கத்தின் வீஐபீ கட்டிட புதுப்பித்தல் மற்றும் சுகததாச விளையாட்டரங்க ஆசனவிருக்கைப் பகுதி புதுப்பித்தல் என்பவற்றிற்கான கேள்விகள் கோரும் போது இவற்றுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (எ) | 2006 மார்ச் 01 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டலின் 6.3.6 ஆம் பிரிவு | கேள்விகள் திறக்கும் போது பதிவேடு/ குறிப்பிடப்பட்ட படிவத்தில் கேள்விகளின் விபரங்கள் பதிவதற்கு வேண்டப்பட்டிருந்ததுடன் கேள்வி திறத்தல் குழு உறுப்பினர்களால் கையொப்பிடப்பட வேண்டிய தேவைப்பாடு இருந்தது. எவ்வாறாயினும், சுகததாச வெளியக வீஐபீ கட்டிட புதுப்பிப்பு மற்றும் சுகததாச விளையாட்டரங்க ஆசனவிருக்கைப் பகுதி புதுப்பித்தல் என்பவற்றிற்காக கோரப்பட்ட கேள்விகள் தொடர்பில் இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |

5

| | | |
|---|---|---|
| (ஏ) | 2010 செப்தெம்பர் 08 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டலின் 18 ஆம் இலக்க குறைநிரப்பின் 5.4.4 ஆம் பிரிவு | தொழிலாரம்பிப்பு முற்பணக் கொடுப்பனவு ஒப்பந்த தொகையின் 20 சதவீதமாக வரையறுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக அதிகாரசபையானது போகம்பர சக்தி வர்த்தன மண்டபத்தின் நிர்மாணத்திற்கான முற்பணமாக ஒப்பந்த தொகையின் 50 சதவீதத்திற்கு சமமான ரூபா 6,194,828 தொகை மற்றும் புதுப்பித்தலிற்காக ரூபா 1,088,512 தொகை என்பன செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பிரதான களஞ்சியப் பதிவேடுகளின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தப்பட்ட இருப்பு மீதிகள் ரூபா 6,331,356 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுக்களின்படி அது ரூபா 6,195,938 ஆக இருந்தது. இதன் விளைவாக இருப்புக்கள் ரூபா 135,422 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முன்னைய ஆண்டிற்காக ரூபா 74,040,180 நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 82,758,124 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 8,717,944 ஆல மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையன் வருமானக் கூற்றினை பகுப்பாய்வு செய்கையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தில் ரூபா 3,800,000 ஆன அதிகரிப்பைக் காட்டுகிறது. இது 5 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதேபோல, அதிகாரசபையின் செயற்பாட்டு வருமானம் ரூபா 7,904,974 ஆல் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 20,422,918 ஆல் அதிகரித்திருந்தது. வருமான அதிகரிப்பு சதவீதம் 11 சதவீதமாக இருந்ததுடன் செலவின அதிகரிப்பு சதவீதம் 9 சதவீதமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரசபையானது விளையாட்டரங்கங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு, விசேடமாக உள்ளரங்க மற்றும் வெளியரங்க விளையாட்டரங்கங்களில் விளம்பரங்கள் வெளிப்படுத்துவதன் மூலமாக வருமான வழிகள் மற்றும் செலவினங்களில் முறையான முகாமைத்துவம் என்பவற்றில் ஆக்கபூர்வமான அளவீடுகளை எடுடிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டினை போது அதிகாரசபையின் ஒவ்வொரு விளையாட்டரங்கத்தாலும் உழைத்த வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவினம் தொர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விளையாட்டரங்கம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் | | சதவீதமாக அதிகரிப்பு / (குறைவு) | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | சதவீதமாக அதிகரிப்பு / (குறைவு) |
|---|---|---|---|---|---|---|
| | 2012 ரூபா | 2011 ரூபா | % | 2012 ரூபா. | 2011 ரூபா | % |
| சுகததாச உள்ளக அரங்கம் | 45,422,052 | 45,913,022 | (1) | 98,728,281 | 76,012,550 | (30) |
| சுகததாச வெளியக அரங்கம் | 20,935,006 | 15,894,462 | 32 | 31,809,232 | 31,496,985 | (1) |
| பெலியத்தை | 151,481 | 129,022 | 17 | 4,124,439 | 3,402,527 | (21) |
| நுவரெலியா | 2 ,080,131 | 29,397 | 6,975 | 2,297,166 | 25,000 | (9,089) |
| போகம்பர | 3,607,026 | 2,553,687 | 42 | 19,869,970 | 18,662,377 | (6) |

### 4.2. முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் மாதத்தின் போது உள்ளக அரங்கம் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில், ரூபா 1,534,154 தொகை வைக்கப்பட்டிருந்தது 2 முதல் 14 நாட்கள் தாமதத்துடன் வங்கியில் வைப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் மேலதிக செயலாளரின் (நிர்வாகம்) 2011 திசெம்பர் 28 ஆந்திகதிய எம்எஸ்/05/எல்/10 ஆம் இலக்க கடிதத்தின் படி, ஒப்பந்த தெகையில் 80 சதவீதத்தை விஞ்சிய கொடுப்பனவுகளைச் செய்ய முன்னர் நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நெறிப்படுத்தல் தொழில்நுட்ப குழுவிடமிருந்து மதிப்பீடுகளிலுள்ள வீதங்களிற்காக அங்கீகாரம் பெறுவதற்கு வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உரிய அங்கீகாரமில்லாமல், அதிகாரசபையானது எல்லைகளை விஞ்சி போகாம்பற சக்தி வர்த்தன மண்டப நிர்மாணம் மற்றும் போகாம்பற சக்தி

7

வர்த்தன மண்டப புதுப்பித்தல் என்பவற்றிற்கான கொடுப்பனவுகளைச் செய்திருந்தது. மேலும், நிர்மாண வேலைகள் தொடங்குவதற்கு முன்னர், அதிகாரசபையானது கண்டி மாநகர சபையிலிருந்து திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(இ) பணிப்பாளர் (பொறியியல்) 2013 யூன் 13 இல் 400 மீற்றர் ஓட்ட வரிசைபோடும் ஒப்பந்தகாரரின் ரூபா 129,799,400 பெறுமதிக்கான வேலை பூர்த்தியாக்கல் சான்றிதழை வழங்கியிருந்ததுடன் இதன்படி அதிகாரசபை கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்ளக விளையாட்டரங்க முகாமையாளரின் 2013 யூன் 18 ஆந் திகதிய கடிதத்தின்படி, ஓட்ட வரிசையில் பல குறைபாடுகள் உள்ளன. ஆகவே, பொறியியலாளர் முறைப்படி ஓட்ட வரிசையை பரீடசிக்காமல் பூர்த்தியாக்கல் சான்றிதழை வழங்கியிருந்தாவென கணக்காய்வில் வெளிப்பட்டது.

(ஈ) அதிகாரசபைக்கான மூலதன சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட நிதிகள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் இந்தியன் திரைப்பட விருதுவழங்கல் விழாவிற்காக (ஐஎவ்எவ்ஏ) செலவழிக்கப்பட்டிருந்தது. பின்னர், தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் ரூபா 189,964,602 திருப்பியளித்திருந்ததுடன் வேறு ஏதாவது நோக்கங்களிற்காகவும் அத்தகைய நிதிகள் பயன்படுத்தப்படக்கூடாததென என 2012 சனவரி 06 ஆந் திகதிய பீடி/எச்ஆர்டி/136/2/9/3 ஆம் இலக்க அவருடைய கடிதம் மூலம் நெறிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அதற்கு முரணாக அதிகாரசபையானது குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் நிலையான வைப்பில் ரூபா 14,324,000 தெகையை வைப்புச் செய்திருந்தது.

(உ) 2008 ஆம் ஆண்டில் உடற்பயிற்சி மெத்தைகள் கொள்வனவு மற்றும் விளையாட்டு விடுதி நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் என்பவற்றிற்காக ரூபா 5,000,000 ஐ அதிகாரசபை ஒதுக்கியிருந்தது. எனினும், அத்தகைய நிதி குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் 2008 திசெம்பர் 31 இலிருந்து அழைப்பு வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையானது சுகததாச விளையாட்டரங்கத்தின் கார் தரிப்பிடத்தில் பொருத்துவதற்காக தனியார் கம்பனியொன்றிலிருந்து மின்சார தடுப்பு இயந்திரத்தை ரூபா 5,684,087 இற்கு கொள்வனவு செய்திருந்தது. இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து வேலைசெய்யாமையால், இயந்திரங்கள் திருத்தங்ளிற்காக சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது வெற்றியளித்திருக்கவில்லை. பின்னர், வழங்குனர்,

மூல இயந்திரத்தை பதிலீடு செய்வதற்கு ஒரு பிரதியீட்டு இயந்திரத்தை வழங்கியிருந்தார். எனினும், 2012 செப்தெம்பர் 04 ஆந் திகதிய 04/03/03/26/2010 ஆம் இலக்க பணிப்பாளரின் கடிதம் மற்றும் 2013 சனவரி 13 ஆந் திகதிய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கடிதம் என்பவற்றின்படி, பிரதியீட்டு இயந்திரமும் தொழிற்படும் நிலையில் இருக்கவில்லை. இதன் விளைவாக, அதிகாரசபையானது மேற்குறிப்பிடப்பட்ட இயந்திரங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்திருக்கவில்லை.

(ஆ) சுகததாசா உள்ளக விளையாட்டரங்க உணவகத்தை வாடகைக்கு விடுவதற்காக பெறப்பட்ட கேள்விகளில், அதிகாரசபை ரூபா 121,000 மாதாந்த வாடகையில் கோரப்பட்ட உயர்ந்த கேள்வியாளரை தெரிவுசெய்திருந்தது. அதிகாரசபை கேள்வி திறத்தலிலிருந்து 2013 மார்ச் 14 இல் வழங்கல் கடிதத்தை வழங்குவதற்கு 105 நாட்கள் எடுத்திருந்தது. எனினும் கேள்வியாளர் வழங்கப்பட்ட கடிதத்தை நிராகரித்திருந்தார். பின்னர், அதிகாரசபை புதிய கேள்விகள் கோரியிருந்ததுடன் ரூபா 91,000 மாதாந்த வாடகையில் கோரியிருந்த உயர்ந்த கேள்வியை தெரிவுசெய்திருந்தது. இதன்விளைவாக, புதிய ஒப்பந்தத்தின் கீழ் இரண்டு ஆண்டு காலத்திற்கான அதிகாரசபையின் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 720,000 ஆக இருந்தது. மேலும், புதிய உடன்படிக்கையின் கீழ் தாமத கொடுப்பனவு கட்டணங்கள் அதிகாரசபையை எதிர்பாராமல் பாதித்திருந்த 10 இலிருந்து 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தமை சாதகமற்றதாகக் பாதித்திருந்தது.

(இ) அதிகாரசபையின் விளையாட்டு விடுதிகள் 2010 நவம்பர் 15 இலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு ரூபா 760,000 மாதாந்த வாடகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. பின்னர், 2011 மார்ச் 23 இல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை சொல்லப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கும் அதிகாரசபையினுடைய முகாமைத்துவத்தின் கீழ் விடுதியை செயற்படுத்துவ்தற்கும் திர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையினுடைய முகாமைத்துவத்தின் கீழ் விளையாட்டு விடுதிகளின் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் (நேர் கிரயம் கழித்த பின்னரும் மறைமுக கிரயத்தை கழிக்க முன்னரும்) ரூபா 4,952,228 ஆக இருந்தது. ஆகவே, ரூபா 9,120,000 ஆன வாடகை வருமானத்துடன் ஒப்பிடும் போது அதிகாரசபையினுடைய முகாமைத்துவத்தின் கீழ் ஏற்பட்ட நட்டம் ரூபா 4,167,772 ஆகும்.

**4.4 செயற்திட்டங்களிலுள்ள தாமதங்கள்**

-----------------------------------------------------------

ஆதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டு இறுதிவரையும் 2012 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்களும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. சில தாமதமான நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன.

9

| செயற்திட்டம் | நடவடிக்கை திட்டத்தின்படி பூர்த்தியாக்கல் திகதி |
|---|---|
| நீச்சல் குளத்தில் உள்ளக கசிவு பற்றிய ஆய்வும் திருத்தமும் | 2012.03.30 |
| சுகததாச உள்ளக விளையாட்டரங்க மண்டப திருத்தம் | 2012.03.30 |
| 400 மீ அஞ்சலோட்ட மைதானம் மீளமைத்தல் | 2012.03.30 |
| போகம்பர வலுவூட்டல் மண்டபத்தின் நிர்மாணம் | 2012.03.30 |

## 5. கணக்களி தகைமையும் நல்ல ஆளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின்படி, அதிகாரசபைக்கு சொந்தமான வளங்கள், அமைப்பு அட்டவணை,கடந்த 3 ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள், முகாமையாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களும் செயலாற்றலும் போன்ற அத்தகைய தகவல்களை உள்ளடக்கியதாக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டிணைந்த திட்டமொன்று 2012 திசெம்பர் 31 வரை அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின்படி, ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடைபெறுவதற்கு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபை 2012 இல் மூன்று கூட்டங்களையே நடாத்தியிருந்தது.

**5.3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கொள்வனவுகள்
(இ) பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்
(ஈ) கணக்கீடு
(உ) வருமான சேகரிப்பு
(ஊ) சிறுசெலவுக் காசு
(எ) பாதீடு

டபிள்யூ.பி.சீ விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

11